18. புறநானூற்றுப் பாடல்களில் புலவர் - புரவலர் உறவு நிலையை ஆராய்க.

19. மானத்தின் சிறப்புகளைத் திருக்குறள் வழி நின்று விளக்குக.

20. ‘முயற்சிக்கு வீழ்ச்சியில்லை’ - எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

———————





(For candidates admitted from 2016-2017 onwards)

## U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2022.

### Part I — தமிழ்

### பண்டைய இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

### பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. பொருள் தருக : மஞ்ஞை, கேண்மை

2. ‘நின்ற சொல்லர்’ - யார்? இது யாருடைய கூற்று?

3. போற்றுதல் என்பது யாது?

4. நல்லியக்கோடனை வாழ்த்தியவர்கள் யாவர்?

5. ‘கொள்’ எனக் கொடுத்தலை விட எது உயர்ந்தது?

6. ‘நோகோ யானே’ - என்று வரும் பாடலின் தலைவி சென்ற காட்டு வழியின் தன்மை யாது?

7. நட்பாட்சி - வரையறு.

8. சான்றோர்க்கு அணி எதுவென பழமொழி நானூறு கூறுகின்றது?

9. பரிபாடலின் சிறப்பு யாது?

10. திரிகடுகத்தில் பயின்று வந்துள்ள மூலிகைப் பொருட்களைச் சுட்டுக.

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கயமனார் பாடலில் செவிலித்தாய் வருந்தி கூறியது என்ன?

(அல்லது)

(ஆ) நற்றிணைத் தலைவன் தனது இல்லத்திற்கு விருந்து வர வேண்டும் என்று ஏன் எதிர்பார்த்தான்?

12. (அ) குறிஞ்சிக்கலிப் பாடலில் தலைவன் நகைக்கூட்டம் செய்ததற்கான காரணத்தைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கடையேழு வள்ளல்களின் கொடைப்பண்பைப் புலப்படுத்துக.



13. (அ) தாயங்கண்ணனார் பாடலில் நற்றாயின் துயர நிலையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உலகம் நிலைபெற்று இருப்பதற்கான காரணத்தைப் புறநானூற்றுப் பாடல் வழி இயம்புக.

14. (அ) யாக்கை மற்றும் சான்றோர் பற்றி நாலடியார் யாது கூறுகின்றது?

(அல்லது)

(ஆ) மூத்தோர் வாய்ச்சொல், பேதைமைக் குறித்துப் பழமொழி நானூறு பகிரும் கருத்துக்களை எழுதுக.

15. (அ) நெடுநல்வாடையின் சிறப்புகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) திருக்குறளின் பெருமைகளைப் பகர்க.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ஐங்குறுநூற்றுப் பாடலில் தலைவியின் பிரிவாற்றாமை நிலையை விவரி.

17. நல்லியக்கோடனின் ஈகைத் தன்மையைத் தொகுத்தெழுதுக.